# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 74 — 1973 අගෝස්තු 24 වැනි සිකුරාදා — 1973.08.24

74 ஆம் இலக்கம் 1973ம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 849 | பரீட்சைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும் பிறவும் ... | 857 |


## பதவிகள் — வெற்றிடம்

**இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்**

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப்பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத்தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிரூபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.


### *முக்கிய அறிவித்தல்*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.*

## 3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

## 4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையென்னக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் காட்டுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

## 5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத் திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

## 6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**இலங்கை விமானப் படை**

*மருத்துவச்சிப் பதவி*

*கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப் படையின் மருத்துவ நிலையத்திற்கு மருத்துவச்சி ஒருவர் தேவை. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்திலமைந்தனவாய் அவரவர் கையெழுத்திலிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் 1973.09.08 ந் திகதிக்குப் பிந்தாமல் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும், இலங்கை விமானப் படைத் தலைமைக் காரியாலயம், 594 வது தபாற் பெட்டி, கொழும்பு என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடதுபுற மேல் மூலையில் "மருத்துவச்சிப் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதி அனுப்புக.*

*2. **சம்பளத்திட்டம்.**—ஆண்டிற்கு ரூபா 2,640—16 × 60—3,600 (ஆண்டிற்கு ரூபா 3,060 க்கும் 3,240 க்கும் முன்பு திறமைக்கடவைகள் உண்டு)*

*3. **வயதெல்லை.**—1973.9.8 ந் திகதியன்று 20 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.*

*4. **கல்வியும் மறுதகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும்—*

*(அ) (i) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கு*

*அல்லது*

*(ii) க.பொ.த (சாதாரண நிலை) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி சிங்களம்/தமிழ், எண்கணிதம்/பாடிகணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்ததற்கு*

*அல்லது*

*(iii) அதற்கு ஒப்பான வேறு பரீட்சையில் சித்தியடைந்ததற்கு*

*(ஆ) மருத்துவச் சட்டத்தின் 105 ஆம் அத்தியாயத்தின் vii ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவச்சியென்பதற்கு*

*(இ) நற்குணமும் உடலுறுதியும் உடையரென்பதற்கு*

*(ஈ) அரசாங்க அல்லது தனியார் மருத்துவ நிலையத்தில் மருத்துவச்சியாகக் கடமையாற்றி ஆகக் குறைந்தது ஈராண்டு அனுபவமுள்ளவரென்பதற்கு திருப்திகரமான ஆதாரங்கள் காட்ட வேண்டும்.*

*முக்கிய கவனிப்பு.—திருமணமாகாதவருக்கே முதலிடம் கொடுக்கப்படும்.*

*6. **நியமன விதிகள்.**—பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் பெறும் மருத்துவச்சிக்கு மருத்துவப் பணியாற்றும் வேளையில் அணிய உத்தியோக உடை கொடுக்கப்படும்.*

*6. சேவை நிபந்தனைகள்.—இந்தக் கசற்றின் பகுதி I தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.*

*7. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும்.*

*(அ) பிறப்புச் சான்றிதழ்.*

*(ஆ) ஆகக் கூடுதலான கல்வித்தகைமைச் சான்றிதழ்.*

*(இ) தொழில் அனுபவச் சான்றிதழ்.*

*(ஈ) விண்ணப்பதாரரின் நற்குணம், தகுதி பற்றி அண்மையில் வழங்கப்பட்ட 3 சான்றிதழ்கள்.*

*முக்கிய கவனிப்பு.—ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் நற்குணம், தகுதிபற்றிய சான்றிதழ்கள் இணைக்க வேண்டியதில்லை. அவரவர்களின் திணைக்களத் தலைவர்களிடமிருந்து இவைபற்றிய சான்றிதழ் பெற்று அனுப்பினால் போதுமானது. சான்றிதழ் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.*

*8. திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர் எவருக்கேனும் அல்லது எனக்குப் பெயரிட்டு விண்ணப்பங்கள் அனுப்பக்கூடாது. சொந்தப் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*9. மேற்கூறப்பட்ட தேவைகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் அப்படி நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் பற்றி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.*

*ஆ. சிவகுரு,*
*சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும்,*
*விமானப்படைத் தலைவருக்காக.*

*இ. வி. ப. தலைமைக்காரியாலயம்,*
*594. வது தபாற் பெட்டி,*
*கொழும்பு, 1973.8.3.*

மாதிரிப் படிவம்

மருத்துவச்சிப் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :———.
(தெளிவாக)

2. தபால் முகவரி :———.

3. பிறந்த திகதியும் 1973.9.8 ந் திகதியன்று வயது :———.

4. எந்நாட்டவர் (வம்சாவழி மூலமோ பதிவு மூலமோ இலங்கையராவென்பதைக் குறிப்பிடுக) பதிவு மூலமாயின் பதிவு எண்ணைக் குறிப்பிடுக :———.

5. திருமணமானவரா அல்லவரா :———.

6. கல்வித் தகைமைகள் :———.

7. தொழிற் தகைமைகள் :———.

8. பள்ளிக்கூடம் விட்ட நாள் தொடங்கி பார்த்த தொழில் பற்றிய விபரங்கள் ;—
(கால வரிசைப்படி எழுதுக)
முதலாளியின் பெயரும் விலாசமும் :———.
சேவைக்காலம் : தொடங்கி :———. வரை :———.
வகித்த பதவி :———.

9. என்றாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா அல்லது நன்னடத்தையிற் செல்லுமாறு விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்களைக் கூறுக :———.

10. நற்குணச்சான்றிதழ்கள் கொடுத்தோரின் பெயர்கள், விலாசங்கள், பதவிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :———.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

2–884—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிகள்

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இதன் கீழ் வழங்கியுள்ள மாதிரிப் படிவத்திலுள்ள பிரகாரம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு (இத்திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர் எவருக்கேனும் தனிப்பட்ட முறையில் இல்லாது) தொகைமதிப்புப் புள்ளிவிபர அதிபர், த. பெ. 563, கொழும்பு-7 என முகவரியிட்டு 1973, செப்தம்பர் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் வருடமொன்றுக்கு ரூபா 5,736—6×144—8×180—6×240—ரூபா 9,480 ஆகவும் வருடமொன்றுக்கு ரூபா 6,780, ரூபா 7,500, ரூபா 8,280 ஐயும் கடப்பதற்கு முன்னர் திறமைகாண தடைகளையுடையதாகவும் இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் திறமைகாண் தடைகளுக்கு மேல், பதவி உயர்வு அளிக்கப்படுவதற்கு முன்னர் விதிக்கப்படக்கூடிய திணைக்களப் பரீட்சைகளிலும் ம்ற்றும் பரீட்சைகளிலும் சித்தியடைய வேண்டும்.

3. **பணிக்கமர்த்தும் நியதிகள்.**—பதவி நிரந்தரமானது. ஆனல், இளைப்பாற்றுச், சம்பளமில்லாதது. அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்படுவது. தேர்ந்தெடுத்த அபேட்சகர்கள் மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

(அ) நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமான பதவியொன்றை ஏற்கனவே வகித்துவரும் அபேட்சகரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர், தமது இளைப்பாற்றுச் சம்பள உரிமையைத் தொடர்ந்து அனுபவித்து வருவதோடு, விதவை அனாதை இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் உதவு தொகைகள் செலுத்தியும் வருவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரனும் அவர்—

(அ) ஒரு இலங்கையரென்று.

(ஆ) 1973 செப்டெம்பர் 25 ந் திகதியன்று 22 வயதுக்கு குறையாதவரென்றும் 35 வயதுக்கு கூடாதவரென்றும் (பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின் கீழ் இத்திணைக்களத்தில் பயிற்றப்பட்ட பட்டதாரிப் பயிற்சியாளர்களிடத்திலுள்ள பட்டதாரிகளான ஊழியர்களிடத்திலிருந்தும் விண்ணப்பங்கள் வயதெல்லை வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்).

(இ) புள்ளிவிபரவியல், கணிதவியல், பொருளியல், வாழ்நிலைப் புள்ளி விபரவியல், சமூகவியல், அல்லது மனிதரியல் ஒரு பாடமாக எடுத்து, ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் பட்டதாரி அல்லது கூடிய தாரதரம் உடையவரென்றும், சிறப்புப்பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கம் உடையவரென்றும், திருப்திகரமான அத்தாட்சிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள், அவர்களின் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**கவனிக்குக.**—சமயதீட்சைச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிச் சட்டக் கோவையின் தேவையின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ii) பெற்ற ஆகக்கூடிய கல்லூரி அல்லது உயர்தொழில் தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;

(iii) விண்ணப்பதாரனின் தாரதரங்கள், நடத்தை இப்பதவிக்கு நியமிப்பதற்கான ஆற்றல், தகுதி ஆகியவற்றையிட்டு அண்மையில் எடுத்த மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் இந்த உப பிரிவின் கீழ் நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை வில்லை)

**கவனிக்குக.**—இச் சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளை அனுப்பக் கூடாது. ஆனல் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மாத்திரம், அப்போது காண்பிக்க வேண்டும்.

6. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களும் ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு கோரப்படுகின்றனர்.

எல். பி. ராஜகருணா,
தொகை மதிப்புப் புள்ளிவிபர அதிபர்.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
த. பெ. 563,
கொழும்பு 7, 1973, ஆகஸ்ட் 8.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பதவியும் விளம்பரத்தின் மேற்கோளும் :
———.

2. முழுப்பெயர் (உறுப்பெழுத்துக்களில்), நாட்டினமும் நிரந்தர அஞ்சல் முகவரியும் :———.

3. பிறந்த திகதியும் இடமும், 25.09.1973 ந் திகதியன்றுள்ள சரியான வயதும் :—
வருடம் :———. மாதம் :———. நாட்கள் :———.

4. விவாகமானவராயிருந்தால், விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் :———.

5. கல்வித் தாரதரங்களும், கடைசியாகச் சித்தியடைந்த உயர்ந்த பரீட்சையில் எடுத்த பாடங்களும் (திகதிகளோடு) :
———.

(உங்களின் பட்டப் பரீட்சைக்கு எடுத்த பிரதான பாடத்தை தயவு செய்து குறிப்பிடுக)

6. கல்வி கற்ற இடமும், பாடசாலையிலிருந்து விலகிய தேதியும் :
———.

7. தற்போதைய தொழிலும் (ஏதுமிருந்தால்) சம்பளமும் :———

8. பாடசாலேயிலிருந்து விலகிய காலந்தொடக்கம் செய்த தொழிலும் அரசாங்கத்தின் கீழ் ஏதுமிருந்தால், திகதி களும் முழு விபரங்களும் :————.

9. சிங்களத்திலும் தமிழிலும் எழுத வாசிக்க பேச்சு மொழிபெயர்ப்புச் செய்யக்கூடிய தேர்ச்சியின் அளவு (சித்தியடைந்த பகிரங்க பரீட்சைகளைக் குறிப்பிடுக) :————.

10. ஏதும் விசேட அனுபவம் இருப்பின், விபரங்கள் (உ—ம், உயர் தொழில், நுண்தொழில், விளையாட்டு, சாரணர் பயிற்சி, சமூகப்பணி சேமலாப அலுவல்கள்) :————.

11. புள்ளிவிபர வேலையில் அனுபவம் ஏதுமிருந்தால், விபரங்கள் :————.

12. விண்ணப்பதாரரின் தராதரங்கள், நடத்தை, ஆற்றல் தகுதியையிட்டு அண்மையில் நற்சான்றிதழ்கள் வழங்கிய மூவரின் பெயர்களும் பதவிகளும் (அவ்விதமான நற்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது, பிரதிகளை இணைக்கவும்) :————.

13. குறிப்பிட்ட நற்சான்றிதழ்களைக் கொடுத்தவர்களல்லாத, விண்ணப்பகாரனுக்கு நேராகத் தெரிந்த இருவரின் பெயர்களும் பதவிகளும் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————

2–883—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

இல. ஈ. எஸ். 1/16/4.

## பொறியியற் சேவைச் சபை

இலங்கைப் பொறியியற் சேவை III ஆம் வகுப்பு சிவில் பொறியியலாளர்க்கான வெற்றுப்பதவிகள்

1973 ஆகட்ஸ் 10 ஆம் திகதி இலங்கைக் குடியரசின் 72 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழிபெயர்ப்பின் 1 ஆம், 4 ஆம் பந்திகளில் காணப்படும் “1973 ஆகஸ்ட் 15 என்ற திகதி” “1973 ஆகஸ்ட் 31” எனத் திருத்தப்படுகிறது.

பி. எச். சிறிவர்த்தன,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொறியியற் சேவைச் சபை,
செயலகம்,
கொழும்பு 1,
14 ஆகஸ்ட், 1973.

8–945—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

## நிருவாகக் கல்விக் கழகம்—பயிற்சி, ஆராய்ச்சித் துணைவர்கள்

1973.08.17 ஆந் தேதிய 73 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள மேற்கூறிய வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தியிற் கூறப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் தேதி 1973.09.07 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜி. பீ. விக்கிரமநாயக்க,
இணைச் செயலாளர்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
ரொறின்ரன் சதுக்கம்,
கொழும்பு—7,
1973, ஓகத்து மாதம் 15 ஆந் தேதி.

8–974—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

## நாட்டுப்பொருள்வரித் திணைக்களம்

நாட்டுப்பொருள்வரிக் கண்காணிப்பாளர் பதவிகள்

நாட்டுப்பொருள்வரித் திணைக்களத்தில் நாட்டுப்பொருள்வரிக் கண்காணிப்பாளர் பதவிகள் இரண்டுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, செயலாளர், நிதி அமைச்சு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1973.9.14.

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் : 1973.9.21.

விண்ணப்பங்கள் அடங்கிய அஞ்சல் உறையின் மேல் வலது பக்கத்தில் “நாட்டுப்பொருள்வரிக் கண்காணிப்பாளர் பதவி” என்னும் சொற்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள விண்ணப்பகாரர்கள் விரும்பினுல், விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் கப்பற் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிற் தெரிவு செய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கின்ருர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக்குப் பிரயாணஞ் செய்வதற்கான கப்பற் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. எனினும் ஓய்வூதியம் இல்லை. இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டதாகும். ஓய்வூதியமுள்ள அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பெற்ருல் 71.12.24 ஆந் தேதியும் 42 இலக்கமும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப அவரது நியமனம் அமையும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் கொழும்பில் அல்லது வேறு இடத்தில் ஆறு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குப் பயிற்சிபெறும்படி வேண்டப்படுவர். காலத்துக்குக்காலம் திணைக்கள சோதனைகளுக்கு அவர் தோற்றவேண்டும். தகைமைச் சோதனையில் தேறியவிடத்து மூன்றுவருட காலப் பரீட்சாத்த கால நிலையில், விண்ணப்பகாரர்கள் நாட்டுப் பொருள் வரிக் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுவர். சோதனை எதனிலாயினும் தேறுவதற்குத் தவறினுல் முன் அறிவித்தலில்லாமலே விண்ணப்பகாரர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

(iii) பயிற்சிபெறும் காலத்தில் தேவையான உபகரணங்களையும் பின்னர் நாட்டுப்பொருள்வரிக் கண்காணிப்பாளராக நியமனம் பெற்றவிடத்து உரிய திணைக்களத்துச் சீருடைகளையும் விண்ணப்பகாரர்கள் தங்கள் செலவிலேயே பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். சீருடைகள், பாதணிகள் முதலியவற்றிற்கு விசேடப் படிகள் வழங்கப்படமாட்டா.

3. **வேதனமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அளவுத்திட்டம் வருமாறு :—

(அ) பயிற்சிபெறும் காலத்தில்—ஆண்டொன்றுக்கு 6,720/- ரூபா வேதனம்.

(ஆ) ஆண்டொன்றுக்கு 8,520/- ரூபா வேதனப் படி நிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு. ஆண்டொன்றுக்கு 6,720/- ரூபாவில் ஆரம்பமாகி வருடம் 360 ரூபா கொண்ட 12 ஏற்றங்களைப் பெற்று ஆண்டு 11,040 ரூபா வரை உயரும்.

4. **தேவையான தகைமைகள்.**—(1) ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973.9.14 ஆந் தேதியில் 21 வயதுக்கு குறையாதவர்களாயும் 25 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் விடயத்தில் வயதுக்கட்டுப்பாடு இல்லை.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவராதல் வேண்டும்.

(ஈ) குறைந்தது 5 அடி 6 அங்குலம் உயரம் உடையவராயும் (சுவாசிக்காமல்) 32 அங்குல அகலமுடைய மார்புள்ளவராயும் நல்ல கண்பார்வையும் உடலுறுதியும் உள்ளவராயும் (கண்பார்வை ஆற்றல் குறைந்தது 6/6 உம் 6/12 உமாக இருப்பதோடு நிறபேதப் பார்வை ஆற்றல் குறைவற்றதாக அமைய வேண்டும்) இருக்க வேண்டும்.

5. விண்ணப்பகாரர்கள் ஆவணங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் ஒழுங்குவிதிக்கோவையின் தேவைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர் கல்விச் சான்றிதழ்.

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு, இவற்றிலொன்று கல்விப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களமொழியில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) ஆவணங்களாயினும் ஆவணங்களின் படிகளாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(ii) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறன்றி நேராக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் முதல் இரண்டு வாரங்களுக்கிடையில் அபேட்சகர்களுக்கு அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலைப் பெருதோர் மேலேயுள்ள முகவரிக்கு எழுதி விசாரிக்க வேண்டும்.

8. இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான பொது நிபந்தனைகளையும் கவனிக்குக.

9. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தப்பட்ட ஏனைய கடிதத் தொடர்புகளையும் நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டுமேயன்றி நிதி அமைச்சில் அல்லது நாட்டுப்பொருள் வரித் திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்புதல் ஆகாது.

10. விண்ணப்பகாரர் ஒருவரைப் பற்றி சிபார்சு செய்ய விரும்புவோர்கள் அச்சிபாரிசு அடங்கிய சான்றிதழ் ஒன்றினை அவ்விண்ணப்பகாரருக்கு வழங்கலாம். ஒரு விண்ணப்பகாரரின் தெரிவுக்கு தகாதமுறையில் ஆதரவு நல்கினல் அவ்விண்ணப்பகாரர் இப்பதவிக்குத் தகைமை இழந்தவராவார்.

சீ. ஏ. குறே,
நிதி அமைச்சின் செயலாளர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
1973.8.14 ஆந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

நாட்டுப்பொருள்வரிக் கண்காணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
   (அ) சொந்தப் பெயர் :————.
   (ஆ) பிற பெயர்கள் :————.
2. முகவரி :————.
3. மிக அணித்தான பொலிசு நிலையம் :————.
4. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 1973.09.14 ஆந் தேதியில் வயது—
   ———— ஆண்டுகள் ———— மாதம் ———— நாள்.
5. சாகியம் :—
   (அ) இலங்கைப் பிரசையா? வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா? எனக் குறிப்பிடுக :————.
   (ஆ) வம்சாவழி இலங்கைப் பிரசை என்றால் பின்வருவோர் பிறந்த இடங்களைக் குறிப்பிடுக :—
   (i) விண்ணப்பக்காரர் :————.
   (ii) விண்ணப்பக்காரரின் தந்தை :————.
   (iii) விண்ணப்பக்காரரின் தந்தைவழிப்பாட்டன் :————.
   (iv) விண்ணப்பக்காரரின் தந்தைவழிப்பூட்டன் :————.
6. விவாகமானவரா, விவாகமாகாதவரா, விதவையா, தாரமிழந்தவரா :————.
   விவாகமானவர் என்றால் விவாகமானதேதியும் குழந்தைகளின் எண்ணிக்கையும் :————.
7. கல்வி/உயர்தொழில் தகைமைகள் :————.

| பரீட்சை/பட்டம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| | | |

8. சிங்களமொழியினை/அல்லது தமிழ்மொழியினை வாசிக்க/அல்லது எழுத/அல்லது பேச தமக்குள்ள திறமை :————.
9. பாடசாலையிலிருந்து அல்லது கல்லூரியிலிருந்து விலகிய பின் பார்த்த உத்தியோகத்தர்கள் பற்றிய விப்ரம் (நியமனம் பெற்ற தேதியும் விலகிய தேதியும் கிடைத்த வேதனமும்).————.
10. சேர்ந்திருந்த ஏதாவது படை அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவுச் சேவைகள் பற்றிய விபரங்கள் :————.
11. (அ) உயரம் :— ———— அடி ———— அங்குலம்.
   (ஆ) மார்பின் அகலம் (சுவாசிக்காமல்) :—
   ————அங்குலம்.
   (இ) கண்பார்வை :————.
12. தனது பெயரால் அல்லது தன் மனைவியின் பெயரால் அசையும் அல்லது அசைவற்ற சொத்துக்கள் உண்டா? அப்படியாயின் அவற்றின் பெறுமதியும் அவை அமைந்துள்ள இடங்களையும் குறிப்பிடுக. அத்தகைய சொத்துக்கள் இல்லாதவிடத்து உரிமைவழி கிடைக்கக்கூடிய சொத்துக்கள் உண்டா.————.
13. தாவரவியல் பற்றி அல்லது இரசாயனவியல் பற்றி உங்களுக்கு அறிவு உண்டா? :————.
14. உங்களுக்கு மோட்டார் வண்டியொன்றினை/மோட்டார் சைக்கிள் ஒன்றினை செலுத்தத் தெரியுமா :————.
15. நீங்கள் இதற்கு முன்னர் நாட்டுவரித் திணைக்களத்தின் உத்தியோகமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளீர்களா? அது எந்த நாளில் செய்யப்பட்டது? கடிதத் தொடர்புகளின் தொடர் எண்ணைக் குறிப்பிடுக :————.
16. எந்த தரத்திலானதாயினும் அரசாங்க உத்தியோகத்தை நீங்கள் இதற்கு முன் பார்த்தீர்களா? அப்படியாயின் அதன் தரம்? எங்கே? அதனின்று நீக்கப்பட்டதன் காரணம் என்பவற்றைக் குறிப்பிடுக. திகதிகளைக் குறிப்பிட்டு விபரங்களைத் தருக :————.
17. ஏதாவதொரு குற்றம் காரணமாக நீங்கள் என்றாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? நீதியின் வலையில் பிணிக்கப்பட்டுள்ளீர்களா.? அத்தகைய சம்பவங்கள் இருப்பின் அவை நடைபெற்ற திகதிகள், இடங்கள் முதலியவற்றை விபரமாகக் கூறுக :————.
19. நற்சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் :————.
20. நீங்கள் கடன் பொறுப்புக்கள் இல்லாதவரா? இல்லாவிடில் உமது கடன்களின் அளவினைக் குறிப்பிடுக :————.

21. குறிப்பிடப்பட வேண்டிய பிற தகவல்கள் இருப்பின் அவை :————.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவை என்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அத்திணைக்களத்துத் தலைவரின் அறிக்கை

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவையென்றும், விண்ணப்பகாரரின் வேலையும் ஒழுக்கமும் ———————— என்றும் விண்ணப்பகாரரைத் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுதலை செய்யலாம் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

திகதி :————.

————,
அமைச்சின் செயலாளரது கையொப்பம்.

திகதி :————.

8-947—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### துறைமுக சிறுகல உதவிக் கண்காணிப்பாளர் பதவி

மேற்கூறப்பட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரும் 1973 ஆம் ஆண்டு ஓகத்து 3 ஆம் திகதிய இலங்கைக் குடியரசுக் கசற்றில் காணப்படும் 1973.07.20 ஆம் திகதிய அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

ஜி. பி. பீ. த சில்வா,
பதில் கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1973 ஓகத்து 10 ஆம் திகதி.

8 933—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

## தொழிற்றிணைக்களம்

### செய்துகாட்டுநர்—தொழின்முறைப் பயிற்சி நிலையங்கள்

தொழின்முறைப் பயிற்சி நிலையங்களின் பின்வரும் தொழில்களுக்கான செய்துகாட்டுநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன்கீழ்த் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திலுள்ள பொருளுக்கமைந்தனவாக அமைத்தெழுதப் பெற்று, "தொழில் ஆணையாளர், தொழின்முறைக் கிளை, தொழிற் செயலகம், நாரன்பிட்டி, கொழும்பு 5" என்ற முகவரியில் 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியனவாக, பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். (கடித உறையின் இடது மேற்புற மூலையில் "செய்துகாட்டுநர் பதவிகளுக்கு" என்ற சொற்களை எழுதுதல் வேண்டும் என்பதைத் தயைசெய்து கவனிக்கவும்).

(1) காய்ச்சிப் பொருத்துதல் (வாயுவினலும் மின்சாரத்தினலும்) ;

(2) கடல் எஞ்சின் பழுதுபார்த்தல் ;

(3) மோட்டோர்ப் பொறிநுட்பம்.

2. **ஊதியம்.**—மாதமொன்றுக்கு படிகள் யாவுமுட்பட ரூ. 225 முதல் ரூ. 275 வரை.

**குறிப்பு.**—தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரரின் தகைமைகள், அனுபவம், திறன் என்பவற்றை அனுசரித்தே கொடுக்கப்பட வேண்டிய உண்மையான ஊதிய வீதம் நிருணயிக்கப்படுவதாகும்.

3. **நியமன நிபந்தனைகள்.**—நியமனமானது, முதலாவதாக, தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதற்கிணங்க, விதிக்கப்படும் காலமொன்றுக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையிற் செய்யப்படும். தேவைப்படின், ஒப்பந்த காலம் பின்னர் நீடிக்கப்படுதல் கூடும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—(i) தெரிவுசெய்யப்படுவோர், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதற்கு, குறிப்பாக, 1956 ம் ஆண்டின் 33 ம் இல. உத்தியோக மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் பிரமாணங்கள் யாவற்றுக்கும் அமைந்தொழுகவேண்டியவர்களாவர்.

(ii) தெரிவுசெய்யப்படுவோர் பிணைப்பணம் ரூ. 500 உரொக்கமாகக் கட்டுதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படுவோர் இத் தீவின் எப்பாகத்திலும் சேவைபுரிய வேண்டியவர்களாவர்.

5. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம்—

(1) இலங்கையரென்பதற்கும், 21 வயதுக்குட்படாதவரென்பதற்கும், 35 வயதுக்கு மேற்படாதவரென்பதற்கும், (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை இயைபுடையதன்று).

(2) (அ) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தினை அல்லது அதற்குச் சமமான தராதரப் பத்திரமொன்றினை உடையவரென்பதற்கும்,

(ஆ) (i) அவருக்குத் தேர்வுடைய தொழிலில்—தொழிற்றிணைக்களத்தின் தொழின்முறைப் பயிற்சி நிலையமொன்றில், அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றினல், கூட்டுத்தாபனமொன்றினல், படையினரால் அல்லது கைத்தொழிற்ருபனமொன்றினல் நடாத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் யாதாயினுமொரு பயிற்சி நிறுவனத்தில், பயிற்சித் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளாரென்பதற்குச் சான்றிதழொன்றினை, அல்லது

(ii) மருதானைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இரண்டு ஆண்டு முழுநேரத் தொழிற் பயிற்சித் திட்டமொன்றை நிறைவேற்றியுள்ளாரென்பதற்குச் சான்றிதழொன்றினை உடையரென்பதற்கும், அத்துடன்,

(iii) அரசாங்கத் தொழிற்சாலையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற யாதாயினுமொரு தொழிற்சாலையில் ஐந்து ஆண்டு அனுபவமுடையரென்பதற்கும்,

(3) சிறந்த ஒழுக்கமும் உடலுறுதியும் உடையரென்பதற்கும், திருத்திகரமான சான்று அளித்தல்வேண்டும்.

**குறிப்பு.**—(i) தொழிற் பரிசோதனையொன்றிலும், போதித்தலிற் செய்முறைப் பரிசோதனை ஒன்றிலும் பரிசோதிக்கப்பட்ட பின்னரே விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படுவர்.

(ii) தொழிற்றிணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற யாதாயினுமொரு நிறுவனத்திலே குறித்த தொழிலிற் செய்துகாட்டுநராக அனுபவம் பெற்ற விண்ணப்பகாரர் விரும்பித் தெரிவு செய்யப்படுவர். இவர்கள், தேர்வுச் சபையின் தற்றுணிபின்படி மேற்கூறிய 5 ஆண்டு அனுபவத் தேவையினின்றும் விலக்களிக்கப்பெறுவர்.

6. இப்பொழுது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அப்படியானேர் தெரிவுசெய்யப்படின், அவர்களைச் சேவையினின்றும் விடுவித்தற்குச் சம்மதிப்பதாக அத் திணைக்களங்களின் தலைவர்கள் சம்மதித்தால்மட்டும், அவ்வபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

7. விண்ணப்பங்களுடன், பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்—(**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) (i) பெற்றுள்ள மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(ii) குறித்த தொழிலில் ஐந்து ஆண்டு அனுபவமாயினும் உடையரென்பதற்கு ஆதாரமாகச் சான்றிதழ்.

(iii) அண்மையிலே பெற்ற இரு குணச் சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர் இச் சான்றிதழ்களை இணைக்கவேண்டியதில்லை).

குறிப்பு.—விண்ணப்பகாரர் தமது சாதனங்களின் மூலங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் தேதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ந் தேதி.

(மேற்கூறிய படிவம்)

**தொழிற்றிணைக்களம்**

தொழின்முறைப் பயிற்சி நிலையங்களுக்குச் செய்துகாட்டுநர் பதவி *காய்ச்சிப் பொருத்துதல் (வாயுவினலும் மின்சாரத்தினலும்)/ கடல் எஞ்சின் பழுதுபார்த்தல் மோட்டோர்ப் பொறிநுட்பம்

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. முகவரி :————.

3. (அ) 73.09.17 ந் தேதியன்று வயது :—
ஆண்டு :————. மாதம் :————. நாட்கள் :————.
(ஆ) பிறந்த தேதி :————.

4. பிறப்பிடம் :—
(அ) விண்ணப்பகாரரினது :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தையாரது :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டனரது : ————.

5. எத் தேசத்தவர் ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

7. தொழிற் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்).

8. தொழில் அனுபவம் பற்றிய முழு விவரம் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

9. பின்வருவனவற்றிற் போதித்தற்குத் தகுதியுடையரா ? :—
(அ) சிங்களத்தில் :————.
(ஆ) தமிழில் :————.
(இ) ஆங்கிலத்தில் :————.

10. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்கள் :—
(1)
(2)

11. பிற விவரங்கள் :————.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி :————.

*பொருத்தமற்றவற்றை நீக்குக. ஒவ்வொரு விண்ணப்பமும் ஒவ்வொரு தொழிலுக்கு மாத்திரம் செய்யப்படுதல் வேண்டும்.

8–936—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**இலங்கை மத்திய வங்கி கொழும்பு**
வெற்றிடங்கள்

மத்திய வங்கிச் சேவையில் நடுமைய இயந்திர இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நியமனம் முதலில் தற்காலிக அடிப்படையில் இருக்கும். தகுதியெனக் காணப்படின் நியமனத்தர் வங்கியின் நிரந்தரச் சேவைக்குள் சேர்க்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் மரபுவழியால் அல்லது பதிவு மூலம் இலங்கைக் குடிமக்களாக இருத்தல் வேண்டும்.

**தகைமைகள் :—**

(அ) பெரும் இயந்திரம் இயக்குவதில் குறைந்தது மூன்றுண்டு அனுபவம்.
(ஆ) நடுமைய குளிரேற்றும் இயந்திரத்தையும், துணைக்கருவிகளையும் பயன்படுத்துவதன் மூலம் தண்ணீரை மிகக் கூடியளவு குளிரேற்றக்கூடிய குளிரேற்றும் இயந்திர முறையை இயக்குவதற்கும், நிறுத்துவதற்கும் பொறுப் பேற்கக்கூடிய ஆற்றல்.
(இ) இயந்திரத்தின் இயக்கக் குறைகளைக் குறிப்பெடுத்தல்; மேலும் எல்லாச் சாதனங்களுக்கும் தொடர்க் குறிப்பேடு தயாரிக்கும் ஆற்றல்.
(ஈ) திடமான உடற்சுகமும், முறைமாற்றலின்போது இரவில் வேலை செய்வதற்கு வல்லமையும் விருப்பும்.
(உ) ஆங்கில மொழியில் உற்பத்தியாளர்களினது சேவை பழுதுபார்த்தல் தகவல் கைநூலை வாசித்து அறியக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—நடுமைய குளிரேற்றும் இயந்திரங்களை இயக்குவதி லுள்ள அனுபவம் மேலதிகமானதொரு தகைமையாகும்.

**வயது.**—1973.09.05 ஆந் திகதியில் 40 ஆண்டுகளுக்குக் குறைந்தவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள வீதம் :** $\frac{\text{ரூ. 295—ரூ. 416}}{13 \times 7 \text{ உம் } 4 \times 7.50 \text{ உம்}}$

**பொது :**
(அ) இரவு முறைமாற்றங்களில் வேலை செய்யுமாறு கோரப்படுவர்.
(ஆ) 7 நாள் வாரத்திற்குள் 5½ நாட்கள் கொண்ட எந்தக் காலப் பகுதிக்கும் வேலை செய்யுமாறு கோரப்படுவர்.
(இ) சம்பளத்திற்கு மேலாக திருமணப்படியொன்றும் (விவாகமானவராயின்) கொடுக்கப்படும்.
(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவரது தகைமைகளைப் பொறுத்து, சம்பள வீதத்தில் அமர்த்தப்படுவர்.
(உ) விண்ணப்பப் படிவங்களும் மேலும் விபரங்களும் இலங்கை மத்திய வங்கியின் நிறுவனத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (விண்ணப்பப் படிவங்கள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமாயின் சொந்த முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட நீண்ட அஞ்சலுறையொன்று தேவையானதாகும்).
(ஊ) விண்ணப்பங்கள் நிறுவனப்பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி, அ. பெ. 590, கொழும்பு 1 என முகவரியிடப்பட்டு 1973.09.05 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ அவரை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.
(எ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது. எனவே தத்தம் விண்ணப்பங்களைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

நிறுவனப்பணிப்பாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 1.

8–944—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை இறைவரி உத்தியோகத்தரின் எல்லைக்குட்பட்ட உடுக்கும்பல்வெல கோறளையில் உட்பட்ட நாவெல —மரண விசாரணை அதிகாரிக்கான விண்ணப்பம்**

பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை இறைவரி உத்தியோகத்தரின் எல்லைக்குட்பட்ட உடுக்கும்பல்வெல கோறளைக்குட்பட்ட நாவெலைக்கான ஓர் மரண விசாரணை அதிகாரியை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. விண்ணப்பக்காரர் உடுக்கும்பல்வெல கோறளைக்குட்பட்ட நாவெலையும் கவறவெலையும் வசத்துக்குட்பட்ட இலுக்பெலஸ்சயில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கவேண்டும்.

2. விண்ணப்பங்கள் கீழ்க்காட்டப்பட்ட படிவத்தில் செய்யப்பட்டு 1973 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ம் திகதிக்கு முன் அரசாங்க அதிபர், பதுளை என்ற முகவரிக்கு அனுப்பப்பட **வேண்டும்.**

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் பின்வரும் தகைமைகள் உண்டா என்பதை உறுதிப்படுத்தவேண்டும் :—

(அ) விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயதிற்கு மேற்பட்டவராயும் 60 வயதிற்கு குறைந்தவராயும் இருக்க வேண்டும்.

(ஆ) 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடங்களில் நிரந்தரமாக வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.

(இ) நற்குணமும் நன்நடத்தையும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) சிங்களம்/ஆங்கிலம் 7 ம் வகுப்புக்கு குறையாமல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

4. விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்:—

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம்.

(ஆ) கூடிய கல்வித் திறமைச்சான்றிதழ்.

(இ) அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்.

5. அரசாங்கத்துக் கூட்டுத்தாபனம்/உள்ளூராட்சி உறுப்பினர்/அரசாங்க ஊழியர் விண்ணப்பிக்க தகுதியற்றவராவர்.

6. விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எல். பி. வேரப்பிட்டிய,
மேலதிக அரசாங்க அதிபர்,
பதுளை மாவட்ட அதிபருக்காக.

கச்சேரி,
பதுளை,
1973 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 8 ம் திகதி.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை இறைவரி உத்தியோகத்தரின், எல்லைக்குட்பட்ட உடுக்கும்பல்வெல கோறளையில் உட்பட்ட நாவெல —மரண விசாரணை அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் :————.
2. விலாசம் :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வசிக்கும் கால எல்லையும் :————.
4. (1) விண்ணப்ப முடிவுத்திகதியில் சரியான வயது :————.
(2) பிறந்த இடமும் திகதியும் :————.
5. விவாகமானவரா, விவாகமாகாதவரா ? :————.
6. கல்வித்தராதரம் :————.
7. நிரந்தர தொழில் :————.
8. தொழில் இருந்தால் அதன் விலாசம் :————.
9. விண்ணப்பத்தாரிடம் காணி இருந்தால் அதன் பெறுமதியும் அளவுகளும் :————.
10. கடன் முதலியன இருந்தால் அதன் விபரம் :————.
11. எப்பொழுதாயினும் கோட்டாரால் தண்டிக்கப்பட்டவரா ? : ————.
12. வேறு விசேட தகைமைகள் :————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

8–880 —24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சுகாதாரத் திணைக்களம்

சுகாதார திணைக்களத்திலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்கள், பல் மருத்துவர்கள், ஆசுபத்திரிச் செயலாளர்கள் ஆகியோருக்கான அரையாண்டுதோறும் நடைபெறும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—ஒக்ரோபர் 1973

மேற்காட்டிய பரீட்சை கொழும்பில் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எழுத்துப் பரீட்சை—
27.10.1973—தாபன நியதிக் கோவை*
27.10.1973—ஆசுபத்திரி, மருந்தகம் ஆகியவற்றின் நிருவாகம்
27.10.1973—கணக்குகள்

சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை—இப்பரீட்சைக்கான திகதி பரீட்சை ஆணையாளரினால் வேட்பாளருக்கு அறிவிக்கப்படும்.

* "அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் நடைமுறைக் கைநூலும்" என முன்னர் தலைப்புப் பெற்றிருந்த கேள்விப் பத்திரம் இப்போது "தாபன நியதிக்கோவை" என்ற தலைப்பைக் கொண்டிருக்கும் என்பதைக் கவனிக்குமாறு வேட்பாளர்கள் கோரப்படுகிறார்கள். இப்பாடத்துக்காக அவர்கள் தாபன நியதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்களைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும் :—

**II, III, III (A), V, VI, VII, IX, XVI, XXI, XXIX, XXX, XXXII, XXXIII, XXXV, XXXVI, XXXVIII, XXXIX, XL, XLI, XLIII, XLIV.**

2. வேட்பாளர்கள் "ஃபூல்ஸ்காப்" அரைத்தாளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தின்படி தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். தாளின் இரு பக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3. பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை நடத்தப்படும். பரீட்சை நடத்த அவர் குறிக்கும் நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் வேட்பாளர்கள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த நியதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வறிவித்தலின் இறுதியில் அச்சிடப்பட்டுள்ளன.

4. விண்ணப்பங்கள் பன்முகப்படுத்தப்பட்ட கூற்றுக்களின் தலைவர்களினூடாகப் பரீட்சை ஆணையாளர், மலே வீதி, கொழும்பு-2 என்ற முகவரிக்கு 17.9.1973 ஆம் திகதி அன்றோ முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. வேட்பாளருக்கு, பரீட்சை நடக்கும் திகதியிலிருந்து குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் அவரது பிரவேச அட்டை கிடைக்காவிடின், தாமதமின்றி, பரீட்சை ஆணையாளர், மலே வீதி, த. பெ. 1503, கொழும்பு-2 (தந்தி விலாசம் : "எக்சாம்ஸ்" கொழும்பு) என்ற முகவரிக்கு தமக்குப் பிரவேசப் பத்திரம் கிடைக்கவில்லை என்பதை அறியத்தருவதுடன், கீழ்காணும் தகவலையும் தருதல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :————.

(2) முழுப் பெயர் :————.

(3) முழு அஞ்சல் முகவரி :————.

(4) தபாலகம், பதிவுத்தபால் இலக்கமும் அனுப்பிய திகதியும் ————.

6. 5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய வேட்பாளர்கள் பின்னர் வைத்துக்கொள்ளும் கடிதப் போக்குவரத்துக்கள் வரவேற்கப்படமாட்டா.

7. அடையாள அட்டையைப் பயன்படுத்தல் பற்றி பரீட்சை ஆணையாளரினால் வெளியிடப்பட்ட 29.6.71 ஆம் திகதிய எஸ்ஈ 274 ஆம் இலக்க சுற்றறிக்கை மீளவும் எனது 20.7.71 ஆம் திகதிய 836 ஆம் இலக்க பொதுச் சுற்றறிக்கையாக வெளியிடப்பட்டது இதனைப் பார்க்குமாறு வேட்பாளர்கள் கோரப்படுகின்றனர். பரீட்சை மண்டபத்தினுள் தங்கள் அடையாளத்தை நிரூபித்தல் வேட்பாளரின் பொறுப்பாகும்.

8. இப் பரீட்சைக்குத் தோன்றும் வேட்பாளர்கள் கீழ்க்காணும் அடிப்படையில் கட்டணங்கள் செலுத்த வேண்டும் :—

(அ) முதன்முறை தோற்றத்தில்—கட்டணமில்லை

(ஆ) அதற்குப் பின்னைய ஒவ்வொரு தோற்றத்திலும்—
முழுப் பரீட்சைக்கு—ரூபா 30.00
ஒரு பாடத்திற்கு—ரூபா 10.00
வாய்மொழிப் பரீட்சைக்கு—ரூபா 5.00

கட்டணங்கள் இறைவரி முத்திரைகளில் செலுத்தப்பட வேண்டும், என்பதுடன், வேட்பாளர் அவற்றின்மீது தமது கையொப்பத்தையிட்டு அவற்றின் பெறுமதியை முறைப்படி அழித்தலும் வேண்டும். ஏற்கனவே இப்பரீட்சைக்குத் தோன்றியுள்ள வேட்பாளர்கள் மேலே காட்டியபடி உரிய கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

ஜி. அமரசேன,
பிரதி அதிபர் (நிருவாகம்),
சுகாதார சேவைகள் பணிப்பாளருக்காக.

சுகாதார திணைக்களம்,
த. பெ. 500,
கொழும்பு-1, ஆகஸ்ட் 14 1973.

### விண்ணப்பப் படிவம்

**சுகாதார திணைக்களத்திலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்கள், பல் மருத்துவர்கள், ஆசுபத்திரிச் செயலாளர்கள் ஆகியோருக்காக அரையாண்டுதோறும் நடைபெறும் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை—ஒக்ரோபர் 1973**

1. (அ) கடைசிப் பெயர் முதலெழுத்துக்களுடன் :————.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :————.
2. பதவிப் பெயர் :————.
3. பணிபுரியுமிடம் :————.
4. அஞ்சல் முகவரி (பிரவேச அட்டை அனுப்புதற்காக) : ————.
5. எடுக்கும் பாடங்கள் (பொருந்தாதவற்றை நீக்குக) :————.
   (அ) தாபன நியதிக்கோவை,
   (ஆ) ஆசுப்பத்திரி, மருந்தக நிருவாகம்,
   (இ) கணக்குகள்,
   (ஈ) சிங்களம் (வாய்மொழி),
   (உ) தமிழ் (வாய்மொழி).
6. என்ன மொழியில் நீர் பரீட்சை எடுக்க விரும்புகிறீர் ? : ————.
7. இப் பரீட்சையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ முன்னர் எடுத்துள்ளீரா எனக் கூறவும். அப்படி எனின், பாடத்தையும், ஆண்டு, மாதத்தையும் தருக :————.

மேலே உள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன். *இந்த விண்ணப்பத்தில் தாப்பட்டுள்ள முத்திரைகளின் பெறுமதி என்னால் அழிக்கப்படுதற்கு முன்னர் அவை பெறுமதியுடையனவாகவும் பயன்படுத்தப்படாதுமிருந்தன எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம்.

#### நிறுவகத் தலைவரின் உறுதியுரை

வேட்பாளர் *இம்முத்திரையை/முத்திரைகளை முறைப்படி ஒட்டி அவற்றின் பெறுமதியை அழித்துள்ளார் என இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

வேட்பாளரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
நிறுவகத்தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

(*கட்டணம் செலுத்த வேண்டியதில்லை எனின் இதனை நீக்கலாம்)

பரீட்சை ஆணையாளர்,
கொழும்பு 2.

அனுப்பப்படுகிறது.

பன்முகப்படுத்தப்பட்ட கூற்றின்
தலைவரது ஒப்பம்.

திகதி :————.

### பரீட்சைப் பகுதி, இலங்கை

#### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்திற்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சிவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலீசாரிடம் பரீட்சார்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

#### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும்பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்திற்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர். செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை. மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்வித்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமையவேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறி

விடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருத்தப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக்கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சார்த்தி மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டுவரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மைபற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றஞ் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டுப் பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு.—

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்கக் குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்களை ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மைபற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் **(வலதுபக்க மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்கவேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்திற்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம்பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத் தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

8-946—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

**ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் தர "அ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு, அலுவலகமுறை, நடைமுறைக் கணக்கு ஆகியவற்றில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை—பெப்ரவரி 1973**

1971.06.25 ஆம் திகதி 764 ஆம் இலக்க பன்முகப்படுத்தப்பட்ட கூற்றின் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையில் பிரமாணக் குறிப்புகளின் பின்னிணைப்பு "ஈ" என்பதில் குறிப்பிடப்பட்டதும், 1973 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி நடாத்தப்பட்டதுமான பரீட்சையில் ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் தர "அ" பிரிவிலுள்ள வேட்பாளர்கள் அவரவர் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளார்கள் எனப் பொது அறிவித்தலுக்காக இத்தால் அறியத்தரப்படுகிறது :—

| | பெயர் | கடமைபுரியுமிடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | திரு. அஹமத், ரி. ஏ. பி. | லேடி றிஜ்வே ஆசுப்பத்திரி, பொரளை | அலுவலகமுறை, நடைமுறை |
| 2. | திரு. த அல்விஸ், டபிள்யு. டி. | பெரிய ஆசுப்பத்திரி, இரத்தினபுரி | அலுவலகமுறை, நடைமுறை |
| 3. | திரு. துரகஜவீர, டபிள்யு. எல். | பெரிய ஆசுப்பத்திரி, இரத்தினபுரி | அலுவலகமுறை, நடைமுறை |
| 4. | திரு. குணவர்த்தன, எச். டி. வி. | மார்புக் கிளினிக்கு, களுத்துறை | அலுவலகமுறை, நடைமுறை |
| 5. | திரு. காரியவசம், ரி. ஜி. கே. | மாவட்ட ஆசுபத்திரி, கோட்டகல | அலுவலகமுறை, நடைமுறை |
| 6. | திரு. ராஜபக்ச, டி. என். | கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழு அலுவலகம், கொழும்பு | அலுவலகமுறை, நடைமுறை |
| 7. | திரு. ரணசிங்க, எம். எல். | மாவட்ட ஆசுப்பத்திரி, அறநாயக்க | அலுவலகமுறை, நடைமுறை |
| 8. | திரு. சமரவீர, ஏ. | மாவட்ட ஆசுப்பத்திரி, அறநாயக்க | அலுவலகமுறை, நடைமுறை |
| 9. | திரு. சண்முகநாதன், வி. | மார்பு ஆசுபத்திரி, வெலிசறை | அலுவலகமுறை, நடைமுறை |
| 10. | திரு. திறிமான்ன, எச். டி. ஜே. | கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழு அலுவலகம், கொழும்பு | அலுவலகமுறை, நடைமுறை |
| 11. | திரு. துரைரத்தினம், ஏ. ஜே. | அரசாங்க ஆசுப்பத்திரி, ஊர்காவற்றுறை | அலுவலகமுறை, நடைமுறை |
| 12. | திரு. வில்பேட், கே. பி. | கொழும்பு தெற்கு பெரியாசுப்பத்திரி, களுபோவில | அலுவலகமுறை, நடைமுறை |

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
கொழும்பு, 10 ஆகஸ்ட், 1973.

8–907—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*தமிழ் ஆசிரியர் பரீட்சை—ஒக்டோபர், 1973*

மேற்படி பரீட்சை கீழ்க்குறிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ம் திகதி ஆரம்பமாகும்.

**பரீட்சை நிலையங்கள் :—**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புல்லை, திக்வல்லை, எகலியகொடை, கலிகமுவை, காலி, ஹோமாகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொன்ருகலை, நாவலப்பிட்டி, நிக்கவரட்டியா, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொல்லனறுவை, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. தமிழ் ஆசிரியர் பரீட்சை பகுதி "அ" வில் தற்பொழுது சித்தியடைந்திருக்கும் அல்லது விலக்களிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

3. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8"×1" அளவினதான கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் (தட்டெழுத்து மூலம் தயாரிக்கப்படின் நன்று) 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைப்பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளரின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத, பரீட்சாத்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னதாக 1969 ஆம் ஆண்டு ஒற்ரோபரிலும் அதன் பின்னரும் நடைபெறும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்காக திருத்தப்பட்ட பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

5. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற்பெற விரும்புவோர் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்து அல்லது கல்வி அமைச்சிலுள்ள தகவல் நிலையத்திலிருந்து 40 சதத்திற்கு பெற்றுச்கொள்ளலாம்; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் ரூபா 125 குரிய காசோலையையேனும் அல்லது காசுக் கட்டளையையேனும் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பினுல் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

6. மேலே 4 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தமிழ் ஆசிரியர் பரீட்சை பிரமாண்ங்களுடன் கீழ்க்காணும் திருத்தங்களும் சேர்க்கப்பட வேண்டும். இவை 1973 ஒக்ரோபர் மாதத் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும் நடைமுறையிலிருக்கும் :—

**1 ம் பந்தி :—**

1. **பரீட்சைத் திட்டம்.**—இப்பரீட்சை பகுதிகள் அ, ஆ, இ என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். எனினும் இப்பொழுது நடைபெற இருப்பது பகுதிகள் "ஆ". "இ" க்கான பரீட்சைகள் மட்டுமே.

2. மேற்படி பரீட்சை பிரமாணங்களின் 6-10 பந்திகளின் கீழ் குறிக்கப்பட்டுள்ளபடி இப்பரீட்சையின் "பகுதி அ" விற்குத் தோற்றுவதிலிருந்து விலக்குதல் அளிக்கப்படமாட்டாது. பிரமாணங்களின் 5 ஆம் பந்தியின் கீழ் அல்லாத வேறு காரணங்ளுக்காகப் பரீட்சையின் "பகுதி அ" விற்குத் தோற்றுவதிலிருந் விலக்களித்தல் பெறுவதற்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பெறுபேறுகள் :**

3. (13 ம் பந்தி) பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அவரவர் சித்தியடைந்த, சித்தியடையாத பாடங்களைக் குறிக்கும் பெறுபேற்று அட்டவணைகள் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்புதற்காகப் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரால் வழங்கப்படும் கடித உறைகளில் பரீட்சார்த்திகள் தமது பெயர், முகவரியைச் சரியாக எழுதிக்கொடுத்தல் வேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையின் படி சித்திபெற்றிருந்தாலும் அச்சித்தி தற்காலிகமான்தாகவே கணிக்கப்பட்டு பின்னர் தராதரப் பத்திரம் வழங்கப்படும்போது, அவருடைய பரீட்சைக்குத் தோற்றுவதற்குரியதான தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே உறுதியாக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பொழுது மேற்படி பரீட்சைக்குத் தோற்றுதற்கான தகைமைகள் அற்றவராக இருந்திருப்பின் அவருடைய பரீட்சைப் பெறுபேறும் பரீட்சார்த்தியாம் தன்மையும் நீக்கப்படும். இவ்வகையான தருணத்தில் சித்திகள் தொடர்ந்து கணிக்கப்பட வேண்டும் என அனுமதிகோரும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*1973 ஒக்ரோபர் தமிழ் ஆசிரியர் பரீட்சை "ஆ" பகுதிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்*

சுட்டிலக்கம் :

————.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

ஆணு/பெண்ணு :————.

1. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் :————.

2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :————.
(வண./திரு./திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியராயின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை அன்றேல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்).

3. பிரவேச அட்டை முதலியன அனுப்ப வேண்டிய முகவரி : ————.

4. பரீட்சை நிலையம் (மிகக்கூடிய விருப்பத்திற்குரிய நிலையத்தை முதலாவதாகவும் மற்றவற்றை அதன் கீழும் எழுதுக) :————.

1. ————.
2. ————.
3. ————.

(மூன்று நிலையங்களும் வர்த்தமானப் பிரசுரத்தின் முதலாம் பந்தியிற் தரப்பட்ட நிலையங்களிலிருந்து தெரியப்பட்டனவாயும் வேறு வேறாயும் இருத்தல் வேண்டும்).

5. (அ) பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாகத் . தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. (பரீட்சைக் கட்டணம் ரூபா 20.00).

(ஆ). ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி ரூபா ;—

| |
|---|
| முத்திரை ஒட்டும் இடம். இம்முத்திரை பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு பயனற்றதாக்கப்பட வேண்டும். முத்திரைகள் ஒன்றை ஒன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. 1973 ஜனவரி 1 ந் திகதியன்று வயது :————.

7. தற்போதைய நியமனம் பற்றிய விபரம் :————.

(அ) பாடசாலையின் பெயரும் முகவரியும் முகாமையும் : ————.

(ஆ) அந்தஸ்து :————.
(நிரந்தர/தகுதிகாண்/தற்காலிக/பதில் ஆசிரியரா ?)

(இ) பரீட்சார்த்தி கற்பிக்கும் பாடங்கள் :————.
(சாதாரண பாடசாலைப் பாடங்கள்/விசேட பாடசாலைப் பாடங்கள்)

(ஈ) பரீட்சார்த்தி எம்மொழி மூலம் கற்பிக்கிறார் ? :————.

(உ) வாரம் ஒன்றுக்கு எத்தனை மணித்தியாலங்கள் ? :—

(ஊ) மாதாந்த திரட்டிய சம்பளம் :————.

8. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக :————.

9. சேவையின் அடிப்படையில் சலுகைகோரின் அது பற்றிய விபரம் :————.

சலுகை கோரும் பகுதி :————.

10. இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும் :————.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புகளையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி இவ்விண்ணப்பத்தின் 2 ம், 6 ம், 7 ம், 8 ம், 9 ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் :————.

பாடசாலை முகாமை :————.

(அரசாங்கக் கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட உதவி நன்கொடை பெறாத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக.)

கையொப்பம் :————.

பெயர் :————.

முகவரி :————.

திகதி :————.

**11. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று—**

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னால் ஒட்டப்பட்டதெனவும் இது இதன்முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படித்து ஒழுக வேண்டிய விதிகளுக்கும் ஒரேமுகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

12. பரீட்சார்த்தியின் கையெழுத்தை உறுதிப்படுத்தல் :————.
(எல்லா பரீட்சார்த்திகளுக்கும்).

.........................................ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி..........................என்னுமிடத்தில் வதிபவர் எனவும், எனக்கு நன்கு அவரைத் தெரியும் எனவும் 1973 ஆம் ஆண்டு..............மாதம்...........ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்.

பெயர் :————. தகுதி :————.

முகவரி :————. திகதி :————.

**கவனிக்க வேண்டியவை—**

விண்ணப்பப் படிவத்தின் 12 ஆம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் :—

(i) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டு, அதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(ii) ஆசிரியர் சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரத்தை சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800 ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்தச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க, கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர், அப்பகுதியின் கிராமசேவகர், புத்தவிகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்க்ளில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய தகுதிவாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவார்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந் உ.

8–951 —24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு **வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு **வர்த்தமானி** பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஓகத்து** .. | **3.8.73** | வெள்ளி .. | **25.7.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **10.8.73** | வெள்ளி .. | **1.8.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **17.8.73** | வெள்ளி .. | **8.8.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **24.8.73** | வெள்ளி .. | **15.8.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **31.8.73** | வெள்ளி .. | **22.8.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** .. | **7.9.73** | வெள்ளி .. | **29.8.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **14.9.73** | வெள்ளி .. | **5.9.73** | புதன் .. | ந.ப. 12.00 |
| | **21.9.73** | வெள்ளி .. | **11.9.73** | செவ்வாய் .. | ந.ப. 12.00 |
| | **28.9.73** | வெள்ளி .. | **19.9.73** | புதன் .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
**கொழும்பு,**
**1973 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது